**செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை - 2019**

செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் அந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுமைக்குட்பட்ட தரப்பினரதும் பொறுப்பு**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் அனைத்து நிறுவனங்களாலும், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம், கணக்காய்வுக்குட்படுத்தப்படும் எந்தவொரு நிறுவனத்தினதும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கப்படக்கூடிய வகையிலான காலப்பகுதியினுள் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தினுள் தயாரிக்கப்படுகின்றமையை சான்றுபடுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

**1.2 நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவனத்தின் மீளாய்வாண்டிற்குரிய வரைபு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள், நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குரிய பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 396 | ரூபா 174,241 கூட்டுத்தொகையான 6 மாதங்களை கடந்த 8 காசோலைகள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக் கவில்லை. | நிதிப்பிரமாணத்தின பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 8.2.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு வருடத்திற்கும் உரிய வருமன மிகைகள் திறைசேரிக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் உயர் முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடி எதிர்காலத்தில நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 8.2.2ஆம் பிரிவு | நிறுவனத்தினால் ரூபா 32 மில்லியன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 27 மில்லியன் முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்புகளுக்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | 8.3.3(அ) பிரிவு | ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான தகைமையினை பெற்றுக்கொள்வதற்காக, கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் அந்த வருடம் நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2018ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஆகஸ்ட் 05ஆந் திகதி அதாவது, 157 நாட்கள் தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2018ஆம் ஆண்டிற்கான இலாபத்தினை அடிப்படையாக கொண்டு, 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,816,823 ஊக்குவிப்புக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருடன் கலந்துரையாடியதன் பின்னரே அந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 6.5.3 ஆம் பிரிவு | 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகள் 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020ஆம் ஆண்டில் ஏற்பட்ட தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அந்த 2 வருடங்களுக்குரிய அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுரைக்கமைய ஆண்டறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2000 சனவரி 11ஆந் திகதிய பீஎவ்/பீஈ 05 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பதவியணிக்காக மேலதிக படிகள் மற்றும் ஏனைய வகையிலான நலன்களை வழங்கும் போது,அமைச்சரவையின் அல்லது உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அல்லது பொது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது வருகைப் படிகளாக ரூபா 500 படியாக ரூபா 32,500 கூட்டுத்தொகை மற்றும் பதவியணியினரின் பிறந்ததின விழாக்களுக்காக ரூபா 16,490 செலவிடப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் மாதம் 14ஆந்திகதி வருகைப் படியானது ரூபா 1,000 வரை அதிகரிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், அது இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. 2019 நவம்பர் மாதத்தின் போது நிர்வாக மாற்றங்களின் அடிப்படையில் பதவியணியினரின் பிறந்ததின கொண்டாட்டங்களுக் காக ஒதுக்கப்பட்ட தொகை செலவிடப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2008 பெப்ரவரி 06ஆந் திகதிய 05/2008ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 24ஆந் திகதிய 05/2008(I) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | நிறுவனத்தினால் பிரசைகள் சாசனத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக் கவில்லை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம்

### 2.2.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 318 மில்லியனான கடன்பட்டோர் மீதியொன்று நிலவியதுடன், அவற்றுள் 30 சதவீதம் 5 வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் 23 சதவீதம் 1-5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக காணப்படும் பழமையான கடன்பட்டோர் மீதியான போதிலும், அந்த மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மின்சார சபையின் மற்றும் நெவில் பெர்னாந்து மருத்துவமனையின் திறப்பு விழாவிற்காக பெற வேண்டிய நிலுவைப் பணத்தை பெற்றுக்கொள்ள வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் செயன்முன்னேற்றமொன்றை பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | நிலுவைக் கடன் மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை நிலைபெறுதகு அதிகாரசபைக்காக 2 தொலைக்காட்சி விளம்பரங்களை தயாரிப்பததற்காக செலிசினெ தொலைகாட்சி நிறுவனத்தினால் அந்த அதிகாரசபையிடமிருந்து ரூபா 4,108,637 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், விளம்பரங்களை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 3,428,150 செலுத்தப்பட்டிருந்தது. சேவை வழங்கல் நிறுவனத்தை தெரிவு செய்யும் போது 2006இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிராததுடன்,பெறுகைகள் வழிகாட்டி 5.4.4 இன் பிராகரம், முற்பண செலுத்தல் பிணையமொன்றினை பெற்றுக்கொள்ளாது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பெறுமதியில் 50 சதவீதம் அல்லது ரூபா 1,714,075 தொகை முற்பணமாக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக உடன்படிக்கையின் 2ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தம் தாமதமாக நிறைவேற்றப்பட்டமையால் 5 | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சதவீதமான ரூபா 171,407 ஆன தாமதக் கட்டணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி நலன்களை வழங்கும் தேசிய உற்சவம் தொடர்பான அறிவித்தல்களை பத்திரிக்கைகளில் பிரசுரிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை மதிப்பீடுகளில் காண்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 118,238 தொகையை அறவீடு செய்ய முடியாதிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் தொடர்பில் பரீட்சிக்கும் போது கிரபிக்ஸ் மற்றும் அச்சீட்டு வருமான இலக்கின் 50 சதவீதம் மற்றும் உற்பத்தி வருமானம் இலக்கின் 40 சதவீதம் மாத்திரம் மாத்திரம் அடையப்பட்டிருந்ததாகவும், முகாமைத்துவ கணக்கு கட்டமைப்பின் அறிமுகப்படுத்தும் பணிகள் உரிய காலப்பகுதியினுள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | நடப்பாண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பில் மீள அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்திற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயல்நடவடிக்கைத் திட்டதின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 3.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2003 யூன் 02ஆந் திகதிய மற்றும் பீஈடீ 12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டிற்குரிய கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படாது செயல்நடவடின்னைத் திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, எந்தவொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் குறித்த திட்டத்திற்காக பணிப்பாளர் | கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2019 திசெம்பர் மாதம் முதல் 2020 திசெம்பர் மாதம் வரையிலும் பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்படாமையால் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், குறித்த அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த இரு அறிக்கைகளையும் அங்கீகரிக்க முடியாதிருந்தது. |

**3.2 பாதீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2003 யூன் 02ஆந் திகதிய மற்றும் பீஈடீ 12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2ஆம் பிரிவின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இடம்பெறும் பணிப்பாளர் சபைக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்து, அதற்காக அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |